**நீதித்துறை நடுவர் நீதிமன்றம், திருவையாறு.**
**முன்னிலை : செல்வி.S.ஆக்னஸ் ஜெப கிருபா, எம்.எல்.,**
நீதித்துறை நடுவர், திருவையாறு.

**2026-ம் வருடம் ஜூன் மாதம், 27-ம் நாள், சனிக்கிழமை**

**ஆண்டு பட்டியல் வழக்கு எண்.11/2019**
**CNR NO: TNTJ160004262019**

அரசுக்காக: உதவி ஆய்வாளர்,
திருவையாறு காவல் நிலையம்,
குற்ற எண்.373/2017 ...குற்றமுறையிடுபவர்

//எதிராக//

1. இளங்கோவன்(Died)
   த/பெ. கிருஷ்ணமூர்த்தி,
2. ராஜேந்திரன், (வயது 47/2026)
   த/பெ. தங்கராஜ்,
   லிங்கத்தடி புதுத்தெரு,
   கல்யாணபுரம் அஞ்சல்.
   திருவையாறு தாலுக்கா.
3. சிவா, (Died)
   த/பெ. மூக்கையன். ...எதிரிகள்

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்ற 07.04.2021 நாளிட்ட R.O.C No. 814/2020 RG/F1 (P.Dis.No.36/2021) உத்தரவின்படி CASE SUMMARY கீழ்கண்டவாறு விவரிக்கப்படுகிறது. | | | | | | |
| **S.No.** | **CASE SUMMARY** | | | | | |
| (i) | **The Period of remand of the accused** | : | **Name of the Accused** | | **Date of Remand** | **Release on** |
| | | | 1. | Elangovan (Died) | Anticipatory Bail granted in Cr.M.P.No.756/2018 Dt. 21.02.2018 by the Honourable Principal District and Sessions Court, Thanjavur | |
| | | | 2. | Rajendran | | |
| | | | 3. | Siva (Died) | Anticipatory Bail granted in Cr.M.P.No.520/2023 Dt. 28.01.2023 by the Honourable Principal District and Sessions | |

AGNES JEBA KIRUBA S
Digitally signed by AGNES JEBA KIRUBA S
Date: 2026.06.27 19:32:36 +0530

<table>
<tr><td></td><td></td><td></td><td colspan="2"></td><td colspan="2">Court, Thanjavur</td></tr>
<tr><td rowspan="2">(ii)</td><td rowspan="2">The date of filing of the complaint/final report in the Court</td><td rowspan="2">:</td><td colspan="2">Filing of Complaint</td><td colspan="2">Filing of Final Report</td></tr>
<tr><td colspan="2">24.10.2017</td><td colspan="2">19.12.2019</td></tr>
<tr><td>(iii)</td><td>The date of committal of the case to the Court of Session</td><td>:</td><td colspan="4">NIL</td></tr>
<tr><td>(iv)</td><td>The date of questioning of the accused U/Sec.228, 240, 246 and 251 of the Code of Criminal Procedure, 1973, as the case maybe</td><td>:</td><td colspan="4">05.02.2021</td></tr>
<tr><td rowspan="2">(v)</td><td rowspan="2">Filing of all miscellaneous petitions and their results including the results on challenge before superior Courts; except routine petitions like petitions U/Sec 317 of the Code</td><td rowspan="2">:</td><td colspan="2">Crl.M.P.No.</td><td>Date of Filing</td><td>Result</td></tr>
<tr><td colspan="2">Crl.MP.No.1698/2026<br>U/s. 311 Cr.P.C</td><td>25.06.2026</td><td>Allowed</td></tr>
<tr><td rowspan="3">(vi)</td><td rowspan="3">Date of examination in-chief and cross-examination of a witness</td><td rowspan="3">:</td><td colspan="2">Name of the Examination</td><td>Date of Chief</td><td>Date of Cross</td></tr>
<tr><td>PW1</td><td>Jerald Xavier</td><td>07.04.2026</td><td>07.04.2026</td></tr>
<tr><td>PW2</td><td>Kavitha</td><td>27.05.2026</td><td>27.05.2026</td></tr>
<tr><td></td><td></td><td></td><td>PW3</td><td>Udhayachandran (IO)</td><td>25.06.2026</td><td>25.06.2026</td></tr>
<tr><td>(vii)</td><td>Date of examination of the accused U/Sec 313 of the Code</td><td>:</td><td colspan="4">27.06.2026</td></tr>
<tr><td>(viii)</td><td>Details of abscondence of an accused and his appearance/production, as the case may be; and</td><td>:</td><td colspan="4">Not Applicable.</td></tr>
<tr><td rowspan="2">(ix)</td><td rowspan="2">Grant of stay by superior Courts and the results thereof</td><td rowspan="2">:</td><td>Sessions Court CMP Numbers</td><td colspan="2">High Court No and Date of Stay</td><td>Result</td></tr>
<tr><td colspan="4">NIL</td></tr>
</table>

AGNES JEBA KIRUBA S

Digitally signed by AGNES JEBA KIRUBA S
Date: 2026.06.27 19:32:42 +0530

Date:27.06.2026

JM Court, Thiruvaiyaru.

| | | |
|---|---|---|
| 1–வது குற்றச்சாட்டு | : | எதிரிகள், பொது இடத்தில் புகார்தாரருக்கு அருவருப்பு ஏற்படும் வகையில் அசிங்கமான வார்த்தைகளால் திட்டிய செயலுக்காக இதச.பிரிவு.294(b)–ன் கீழ் |
| 2–வது குற்றச்சாட்டு | : | 1–வது எதிரி புகார்தாரரை கம்பியாலும் கட்டையாலும், 2, 3 எதிரிகள் சாட்சி 2–ஐ கம்பியாலும் அடித்து சொற்பகாயத்தை ஏற்படுத்திய செயலுக்காக இ.த.ச பிரிவு 324–ன் கீழ் |
| 3–வது குற்றச்சாட்டு | | எதிரிகள் புகார்தாரரை கொல்லாமல் விடமாட்டோம் என்று கொலை மிரட்டல் விடுத்த செயலுக்காக இதச. பிரிவு.506(ii)–ன் கீழ் |
| 4–வது குற்றச்சாட்டு | | எதிரிகள், புகார்தாரரை பெண் என்றும் பாராமல் பொது இடத்தில் அவமானத்தை ஏற்படுத்தும் வகையில் பேசி வன்கொடுமை செய்த செயலுக்காக தமிழ்நாடு பெண்களுக்கு எதிரான வன்கொடுமை தடுப்புச் சட்டம் பிரிவு 4–ன்கீழ் |
| எதிரிகளின் பதில் | : | பொய் வழக்கு. |
| நீதிபதியின் தீர்மானம் | : | குற்றவாளிகள் இல்லை என முடிவு. |
| உத்தரவு (அ) தண்டணை | : | 1.1, 3 எதிரிகள் இறந்துவிட்டதால் அவர்களுக்கு எதிரான வழக்கு அற்றுப்போய்விட்டது. 2–வது எதிரி மீது இ.த.ச. பிரிவுகள் 294(b), 324, 506(ii) உ/இ தமிழ்நாடு பெண்களுக்கு எதிரான வன்கொடுமை தடுப்புச் சட்டம் பிரிவு 4–ன்கீழ் சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுகள் அரசு தரப்பில் சந்தேகத்திற்கிடமின்றி நிரூபிக்கப்படவில்லை என இந்நீதிமன்றம் முடிவு செய்து, 2 வது எதிரி குற்றவாளி அல்ல என்று, எதிரியை கு.வி.மு.ச.பிரிவு.248(1)–ன் கீழ் விடுதலை செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது.<br>2. இவ்வழக்கில் எதிரி தரப்பில் எழுதிக் கொடுக்கப்பட்ட பிணையப்பத்திரங்கள் ரத்து செய்யப்படுகிறது.<br>3. இவ்வழக்கில் வழக்கு சொத்துக்கள் எதுவும் கைப்பற்றப்படாததால் அவற்றை பொறுத்து உத்தரவு பிறப்பிக்கப்பட வேண்டிய அவசியம் எழவில்லை. |

AGNES JEBA KIRUBA S

Digitally signed by AGNES JEBA KIRUBA S
Date: 2026.06.27 19:32:46 +0530

Date:27.06.2026

JM Court, Thiruvaiyaru.

இவ்வழக்கானது இந்நீதிமன்றத்தில் கடந்த 19.12.2019–ம் தேதி ஆண்டுபட்டிகை வழக்கு எண்.11/2019 என கோப்பிற்கு எடுக்கப்பட்டு, பின்னர் ஆவணங்களை பரிசீலித்தும், இருதரப்பு வாதங்களை கேட்டும், இதுநாள் வரையில் இந்நீதிமன்ற விசாரணையில் இருந்து இன்று இறுதி விசாரணைக்கு வந்தபோது, அரசு தரப்பில் இரண்டாம் நிலை அரசு உதவி வழக்கறிஞர் அவர்கள் ஆஜராகியும், எதிரிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் **திரு.A. ராஜராஜன், B.Com., B.L.,** அவர்கள் ஆஜராகியும், இருதரப்பினரும் எடுத்துரைத்த வாதுரைகளை கேட்டும், ஆவணங்களை பரிசீலனை செய்தும், இன்றுவரை என் ஆய்வில் வைத்தும் இன்று இந்நீதிமன்றம் வழங்கிடும்,

**தீர்ப்புரை**

எதிரிகள் மீது இ.த.ச. பிரிவுகள் 294(b), 324, 506(ii) உ/இ தமிழ்நாடு பெண்களுக்கு எதிரான வன்கொடுமை தடுப்புச் சட்டம் பிரிவு 4–ன்கீழ் குற்றம் இழைத்துள்ளதாக பூதலூர் காவல் உதவி ஆய்வாளர் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

**1. கு.வி.மு.ச.பிரிவு.173–ன் கீழ் தாக்கலான குற்ற இறுதி அறிக்கையின் படி வழக்கின் சுருக்கம்:–**

புகார்தாரரான பட்டியல் சாட்சி.1–க்கு சொந்தமான கடை திருவையாறு தெற்கு வீதியில் ஆட்கொண்டார் கோவில் அருகே உள்ளதில், வாடகைக்கு இருந்த சிங்காரம் என்பவர் இரண்டு வருடங்களுக்கு முன்பு இறந்துவிட்டதிலிருந்து, அந்த கடையை நடத்தி வரும் சிங்காரத்தின் தம்பி ரவி மற்றும் அவருடைய அக்கா ஆகியோர் புகார்தாரரிடம் வாடகை கொடுக்காமல் தகராறு செய்து வந்துள்ளனர். புகார்தாரர் 30.09.2017–ம் தேதி மாலை சுமார் 5.00 மணியளவில் கடைக்கு சென்று வாடகையை கேட்டபொழுது, சிங்காரத்தின் தம்பி ரவி தன்னால் வாடகை கொடுக்க முடியாததால், கடையை நான் தங்களிடம் ஒப்படைக்கிறேன் எனவும் கூறி கடை சாவியை புகார்தாரரிடம் ஒப்படைத்துள்ளார்.

AGNES JEBA KIRUBA S
Digitally signed by AGNES JEBA KIRUBA S
Date: 2026.06.27 19:32:50 +0530

பின் புகார்தாரர் சாவியை வாங்கிக்கொண்டு வீட்டிற்கு சென்ற பின் அன்றிரவு 19.00 மணிக்கு 1–வது எதிரியுடன், 2, 3 எதிரிகள் சேர்ந்து புகார்தாரரின் வீட்டு வாசலுக்கு கம்பி, உருட்டுக்கட்டை போன்றவற்றுடன் சென்று புகார்தாரரை அசிங்கமாக திட்டி, உன்னை கொலை செய்யாமல் விடமாட்டோம் என்று கொலை மிரட்டல் செய்தும், 1–வது எதிரி புகார்தாரரின் தலைமுடியை பிடித்து இழுத்து உருட்டுக்கட்டையால் அடித்து சொற்பகாயத்தையும், தடுக்க சென்ற சாட்சி–2, 3–ஐ 2, 3 எதிரிகள் இருவரும் சேர்ந்து கம்பியால் உடம்பில் அடித்து ஊமைக்காயத்தை ஏற்படுத்தி, இ.த.ச. பிரிவுகள் எதிரிகள் மீது இ.த.ச. பிரிவுகள் 294(b), 324, 506(ii) உ/இ தமிழ்நாடு பெண்களுக்கு எதிரான வன்கொடுமை தடுப்புச் சட்டம் பிரிவு 4–ன்கீழ் குற்றம் இழைத்துள்ளதாக திருவையாறு காவல் உதவி ஆய்வாளர் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

**2.** எதிரிகளுக்கு கு.வி.மு.ச.பிரிவு.204–ன் கீழ் அழைப்பாணை அனுப்பப்பட்டது. எதிரிகள் இந்நீதிமன்றத்தில் முன்னிலையானவுடன், கு.வி.மு.ச.பிரிவு.207–ன் கீழ் வழக்காவணங்கள் இலவசமாக வழங்கப்பட்டன. 3 வது எதிரி இறந்து விட்டதாக தெரிவிக்கப்பட்டு 3–வது எதிரிக்கு எதிரான வழக்கு அற்றுபோய்விட்டதாக உத்தரவு பிறப்பிக்கப்பட்ட பின்னர் ஆவணங்களை பரிசீலித்தும், இருதரப்பின் வாதங்களை கேட்டும், 1, 2 எதிரிகள் மீது இ.த.ச. பிரிவுகள் 294(b), 324, 506(ii) உ/இ தமிழ்நாடு பெண்களுக்கு எதிரான வன்கொடுமை தடுப்புச் சட்டம் பிரிவு 4–ன்கீழ் குற்றம் இழைத்துள்ளதாக குற்றச்சாட்டுகள் வனையப்பட்டு, குற்றச்சாட்டுகளை எதிரிகளுக்கு எடுத்து கூறி விளக்கி வினவியபோது, எதிரிகள் குற்றச்சாட்டை மறுத்தனர். எனவே, அரசு தரப்பு சாட்சி விசாரணைக்கு உத்தரவிடப்பட்டது.

**3.** அரசுதரப்பு வழக்கை நிரூபிப்பதற்காக அரசுதரப்பில் **அ.சா.1 முதல் 3** வரையிலான சாட்சிகள் விசாரணை செய்யப்பட்டு, **அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.7**

AGNES JEBA KIRUBA S

Digitally signed by AGNES JEBA KIRUBA S
Date: 2026.06.27 19:32:54 +0530

வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டன. எதிரிகள் தரப்பில் சாட்சி மற்றும் சான்றாவணங்கள் முன்னிலைப்படுத்தப்படவில்லை.

**4. அரசுத்தரப்பு சாட்சியங்களின் படி வழக்கின் சுருக்கம்:–**

புகார்தாரரான பட்டியல் சாட்சி–1 இறந்துவிட்டார். அ.சா.2 மற்றும் 3–க்கு வழக்கு சம்பவம் பற்றி தெரியவில்லை. கடந்த 02.10.2017–ம் தேதியன்று திருவையாறு ஆய்வாளர் உமாபதி நிலைய பொறுப்பில் இருந்தபோது, தஞ்சாவூர் TMCH–லிருந்து கிடைக்கப்பெற்ற தகவலைப்பெற்று அங்கு உள்நோயாளியாக சிகிச்சையில் இருந்த புகார்தாரர்–அ.சா.1–இடம் புகார் வாக்குமூலம்–அ.சா.ஆ.1 பெற்று, காவல் நிலைய குற்ற எண்.373/2017, ச.பி.294(b), 323, 324, 506(2) இதச உ/இ தமிழ்நாடு பெண்களுக்கு எதிரான வன்கொடுமை தடுப்பு சட்டம் பிரிவு 4ன் கீழ் முதல் தகவல் அறிக்கை–அ.சா.ஆ–2 பதிவுசெய்து, சம்பவ இடம் சென்று, சம்பவ சாட்சிகள் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகசர்–அ.சா.ஆ.3 மற்றும் மாதிரி வரைபடம்– அ.சா.ஆ.4 தயார் செய்து சாட்சிகளிடம் கையொப்பம் பெற்று, பட்டியல் சாட்சிகள் 1 முதல் 4 மற்றும் மகஜர் சாட்சிகளையும் சம்பவம் தனித்தனியாக விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். எதிரிகள் நீதிமன்ற முன்பிணையில் சென்றதை தெரிந்துகொண்டு, காயம்பட்ட நபருக்கு சிகிச்சை அளித்த மருத்துவர்கள் அரவிந்தன், முத்துவிநாயகம் ஆகியோரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து செல்வி என்பவரின் விபத்துப் பதிவேடு மற்றும் மெடிக்கோ லீகல் பாம் அ.சா.ஆ.5 மற்றும் 6 ஆகிய ஆவணங்களை பெற்று, மருத்துவ சான்றின்படி வழக்கின் சட்டப்பிரிவை 294(b), 324, 506(2) இதச உ/இ தமிழ்நாடு பெண்களுக்கு எதிரான வன்கொடுமை தடுப்பு சட்டம் பிரிவு 4–ஆக பிரிவு மாற்றம் செய்து சட்டப்பிரிவு மாற்றறிக்கை–அ.சா.ஆ.7 தயார் செய்து, வழக்கின் புலன் விசாரணை முடித்து 01.04.2018–ஆம் தேதி எதிரிகளுக்கு எதிராக குற்ற இறுதி அறிக்கை தயார் செய்து தாக்கல் செய்துள்ளார்.

AGNES JEBA KIRUBA S

Digitally signed by AGNES JEBA KIRUBA S
Date: 2026.06.27 19:32:57 +0530

**5.** 1, 3 எதிரிகள் இறந்துவிட்டதாக தெரிவிக்கப்பட்டு 1, 3 எதிரிகளுக்கு எதிரான வழக்கு அற்றுபோய்விட்டதாக உத்தரவு பிறப்பிக்கப்பட்ட பின்னர், அரசுதரப்பு சாட்சிகளின் சாட்சியங்களிலிருந்து 2-வது எதிரிக்கு பாதகமாக உள்ள சாட்சியங்கள் குறித்து, கு.வி.மு.ச.பிரிவு.313(1)(ஆ)-ன் கீழ் 2-வது எதிரியிடம் வினவியபோது, எதிரி அவற்றை பொய்சாட்சி என்றும், பொய்வழக்கு என்றும் பதில் கூறினார். எதிரியின் பதில் பதிவு செய்யப்பட்டது. எதிரி தரப்பில் விசாரிக்க சாட்சிகள் இல்லை என்று கூறினார்கள். எதிரி தரப்பு சாட்சி விசாரணை முடிக்கப்பட்டது.

**6. இவ்வழக்கில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை யாதெனில்,**

(i) எதிரிகள் மீது இ.த.ச. பிரிவுகள் 294(b), 324, 506(ii) உ/இ தமிழ்நாடு பெண்களுக்கு எதிரான வன்கொடுமை தடுப்புச் சட்டம் பிரிவு 4-ன்கீழ் குற்றம் இழைத்துள்ளதாக சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்கள் அரசு தரப்பில் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளதா?

(ii) எதிரிகளுக்கு வழங்கப்பட வேண்டிய தண்டனை என்ன? என்பதேயாகும்.

**7. தீர்வு:-**

கடந்த 30.09.2017-ம் தேதி இரவு 19.00 மணிக்கு 1-வது எதிரியுடன், 2, 3 எதிரிகள் சேர்ந்து புகார்தாரரின் வீட்டு வாசலுக்கு கம்பி, உருட்டுக்கட்டை போன்றவற்றுடன் சென்று புகார்தாரரை அசிங்கமாக திட்டி, உன்னை கொலை செய்யாமல் விடமாட்டோம் என்று கொலைமிரட்டல் செய்தும், 1-வது எதிரி புகார்தாரரின் தலைமுடியை பிடித்து இழுத்து உருட்டுக்கட்டையால் அடித்து சொற்பகாயத்தையும், தடுக்க சென்ற சாட்சி-2, 3-ஐ 2, 3 எதிரிகள் இருவரும் சேர்ந்து கம்பியால் உடம்பில் அடித்து ஊமைக்காயத்தை ஏற்படுத்தியும், இ.த.ச.

AGNES JEBA KIRUBA S Digitally signed by AGNES JEBA KIRUBA S Date: 2026.06.27 19:33:01 +0530

பிரிவுகள் எதிரிகள் மீது இ.த.ச. பிரிவுகள் 294(b), 324, 506(ii) உ/இ தமிழ்நாடு பெண்களுக்கு எதிரான வன்கொடுமை தடுப்புச் சட்டம் பிரிவு 4–ன்கீழ் குற்றம் இழைத்ததாக அரசு தரப்பில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டு, மேற்படி பிரிவுகளின் கீழ் இந்நீதிமன்றத்தால் குற்றச்சாட்டு வனையப்பட்டுள்ளது.

கடந்த 30.09.2017–ஆம் தேதி 19.00 மணிக்கு வழக்கு சம்பவம் நடைபெற்றதாக சொல்லப்பட்டு, 24.10.2017–ஆம் தேதி 18.00 மணிக்கு முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டு, 07.11.2017–ஆம் தேதி காலை 10.30 மணிக்கு நீதிமன்றத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. வழக்கு விசாரணை 10.04.2018–ம் தேதி முடிவுற்று, குற்ற இறுதி அறிக்கை 19.12.2019 அன்று நீதிமன்றத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

இவ்வழக்கில் புகார்தாரர் இறந்துவிட்டார். கண்ணுற்ற சாட்சிகளக–அ.சா.1, 2 சாட்சிகளும், புலன் விசாரணை செய்த அதிகாரி தரப்பில் உதவி ஆய்வாளர்–அ.சா.3–ஆகவும் விசாரணை செய்யப்பட்டுள்ளனர். ஏனைய பட்டியல் சாட்சிகள் அரசு தரப்பில் விசாரணை செய்யப்படவில்லை.

புகார் கொடுத்த புகார்தாரரான பட்டியல் சாட்சி–1 இறந்துவிட்டார். அ.சா.1 தனது சாட்சியத்தில், பட்டியல் சாட்சி 1 தனது பக்கத்து வீட்டுக்காரர் என்றும், இருதரப்பிற்கும் பிரச்சனை என்று மட்டும் தெரியும் என்றும், என்ன பிரச்சனை என்று தனக்கு தெரியாது என்றும், விசாரித்தும் தெரிந்துகொள்ளவில்லை என்றும் பிறழ்சாட்சியாக மாறி அரசுத் தரப்பிற்கு எதிராக சாட்சியம் அளித்துள்ளார். அ.சா.2 தனது சாட்சியத்தில், தான் புகார்தாரர் வீட்டில் வீட்டு வேலை பார்த்தேன் என்றும், அவர் இறந்துவிட்டார் என்றும், அவர் எதற்காக புகார் கொடுத்தார் என்று தெரியாது என்றும், தான் வேலை பார்த்த வீட்டிற்கு எதிரி வருவதன் மூலம் தனக்கு எதிரியை தெரியும் என்றும், பட்டியல் சாட்சி–1 இறந்தவுடன் தான் வேலைக்கு செல்வதில்லை என்றும், வழக்குப்பற்றி தெரியாது என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

AGNES JEBA KIRUBA S Digitally signed by AGNES JEBA KIRUBA S Date: 2026.06.27 19:33:04 +0530

எதிரி வழக்கு சம்பவத்தில் ஈடுபட்டதாக அரசு தரப்பு சாட்சிகள் மூலம் நிரூபிக்கப்படவில்லை. புலன் விசாரணை அதிகாரி தரப்பில் சாட்சியமளித்துள்ள அ.சா.4–உதவி ஆய்வாளர், இவ்வழக்கின் புலன் விசாரணை அதிகாரி புகார்தாரரிடமிருந்து புகாரை பெற்று, முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து, விசாரணை செய்து குற்ற இறுதி அறிக்கையை தாக்கல் செய்தது குறித்து சாட்சியம் அளித்துள்ளார். இருப்பினும், புலன் விசாரணை அதிகாரியின் சாட்சியத்தை வைத்து மட்டுமே எதிரிகள் மீதான குற்றச் சம்பவம் அரசு தரப்பில் நிரூபித்ததாக எடுத்துக் கொள்ள முடியாது என்று இந்நீதிமன்றம் கருதுகிறது.

மேற்கண்ட காரணங்களின் அடிப்படையில் எதிரிகள் மீதான குற்றச்சாட்டை பொறுத்தவரையில், அரசு தரப்பில் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபணம் செய்யப்படவில்லை என்று இந்நீதிமன்றம் கருதி, மேற்கண்ட சந்தேகங்களின் பலனை எதிரிகளுக்கு அளித்து, 1, 3 எதிரிகள் இறந்துவிட்டதால் அவர்களுக்கு எதிரான வழக்கு அற்றுப்போய்விட்டது என்றும், 2–வது எதிரி மீது இதச பிரிவுகள் 2294(b), 324, 506(ii) உ/இ தமிழ்நாடு பெண்களுக்கு எதிரான வன்கொடுமை தடுப்புச் சட்டம் பிரிவு 4–ன் கீழ் குற்றவாளி அல்ல என்றும், கு.வி.மு.ச.பிரிவு.248(1)–ன் கீழ் இந்நீதிமன்றம் தீர்மானித்து, எதிரி விடுதலை செய்யப்பட வேண்டுமென்று இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது. வழக்கு சம்பவத்தில் புகார்தாரருக்கு காயம் ஏற்பட்டதாக நிரூபிக்கப்படாததாலும், அவர் இறந்துவிட்டதாலும் அவருக்கான இழப்பீடு பொறுத்து உத்தரவு எதுவும் பிறப்பிக்க வேண்டியதில்லை என்று இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

<u>8. முடிவாக,</u>

**1.1, 3 எதிரிகள் இறந்துவிட்டதால் அவர்களுக்கு எதிரான வழக்கு அற்றுப்போய்விட்டது. 2–வது எதிரி மீது இ.த.ச. பிரிவுகள் 294(b), 324, 506(ii) உ/இ தமிழ்நாடு பெண்களுக்கு எதிரான வன்கொடுமை தடுப்புச் சட்டம் பிரிவு 4–ன்கீழ் சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுகள் அரசு தரப்பில் சந்தேகத்திற்கிடமின்றி**

AGNES JEBA KIRUBA S
Digitally signed by AGNES JEBA KIRUBA S
Date: 2026.06.27 19:33:09 +0530

**நிரூபிக்கப்படவில்லை என இந்நீதிமன்றம் முடிவு செய்து, 2 வது எதிரி குற்றவாளி அல்ல என்று, எதிரியை கு.வி.மு.ச.பிரிவு.248(1)–ன் கீழ் விடுதலை செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது.**

**2. இவ்வழக்கில் எதிரி தரப்பில் எழுதிக் கொடுக்கப்பட்ட பிணையப்பத்திரங்கள் ரத்து செய்யப்படுகிறது.**

**3. இவ்வழக்கில் வழக்கு சொத்துக்கள் எதுவும் கைப்பற்றப்படாததால் அவற்றை பொறுத்து உத்தரவு பிறப்பிக்கப்பட வேண்டிய அவசியம் எழவில்லை.**

இத்தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு, இன்று **2026**–ம் ஆண்டு **ஜூன்** மாதம் **27**–ம் நாள் என்னால் திறந்த இந்நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

AGNES JEBA KIRUBA S

Digitally signed by AGNES JEBA KIRUBA S
Date: 2026.06.27 19:33:13 +0530

நீதித்துறை நடுவர்,
திருவையாறு.

**<u>அரசுத்தரப்பு சாட்சிகள் :–</u>**

| | | |
|---|---|---|
| அ.சா.1 | ஜெரால்டு சேவியர் | கண்ணுற்ற சாட்சி |
| அ.சா.2 | கவிதா | கண்ணுற்ற சாட்சி |
| அ.சா.3 | உதயசந்திரன் | புலன் விசாரணை அதிகாரி |

**<u>அரசு தரப்பு சான்றாவணங்கள்:–</u>**

| | | | |
|---|---|---|---|
| அ.சா.ஆ.1 | 24.10.2017 | புகார் வாக்குமூலம் | அ.சா.3 |
| அ.சா.ஆ.2 | 24.10.2017 | முதல் தகவல் அறிக்கை அசல் | அ.சா.3 |
| அ.சா.ஆ.3 | 24.10.2017 | பார்வை மகஜர் அசல் | அ.சா.3 |

| | | | |
|---|---|---|---|
| அ.சா.ஆ.4 | 24.10.2017 | மாதிரி வரைபடம் அசல் | அ.சா.3 |
| அ.சா.ஆ.5 | 01.10.2017 | செல்வி விபத்துப் பதிவேடு அசல் | அ.சா.3 |
| அ.சா.ஆ.6 | 03.10.2017 | செல்வி மெடிக்கல் லீகல் பார்ம் அசல் | அ.சா.3 |
| அ.சா.ஆ.7 | 01.10.2017 | சட்டப்பிரிவு மாற்று அறிக்கை அசல் | அ.சா.3 |

**எதிரிகள் தரப்பு சாட்சிகள், சான்றாவணங்கள் மற்றும் சான்றுப் பொருட்கள்:–**
இல்லை.

குறிப்பு:–

1. எந்த சாட்சியமும் மூன்று முறைக்கு மேல் நிறுத்தி வைக்கப்படவில்லை.
2. இவ்வழக்கில் முடிவு குறித்து காவல்துறைக்கு தெரிவிக்கப்பட்டது.

AGNES JEBA KIRUBA S
Digitally signed by AGNES JEBA KIRUBA S
Date: 2026.06.27 19:33:17 +0530

நீதித்துறை நடுவர்,
திருவையாறு